# இணைப்பு

ஒருங்கிணைப்பு என்றால் என்ன?
ஒருங்கிணைப்பு சலுகைகள்
சுவிட்சர்லாந்தில் புகலிடம்

# ஒருங்கிணைப்பு என்றால் என்ன?

ஒருங்கிணைப்பு என்பது நீங்கள் சுவிட்சர்லாந்தில் நன்றாக உணரும்போது, அனைவரும் ஒரே சமூகத்தின் அங்கமாக உணரும்போது, ஒவ்வொரு நபரும் அனைவரின் நன்மைக்காக பங்களிக்கும்போது ஏற்படுவதாகும். சிறிது சிறிதாக, ஒவ்வொரு நபரும் தங்கள் சாத்தியக் கூறுகளுக்கு ஏற்ப, பொருளாதார, அரசியல், கலாச்சார மற்றும் சமூக வாழ்க்கையில் பங்கேற்க வேண்டும். ஒரு நல்ல ஒருங்கிணைப்புக்கு, மரியாதை, பரஸ்பர உதவி மற்றும் வாய்ப்புகளில் சமத்துவம் ஆகியவை முக்கியம்.

## ஒருங்கிணைப்பு எப்படி நடக்கிறது?

அன்றாட வாழ்வில், வீட்டில், வேலையில் மற்றும் ஓய்வு நேரத்தில் ஒருங்கிணைப்பு நிகழ்கிறது. ஒவ்வொரு நபரும் சுதந்திரமாக நடமாடவும் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளவும் முடியும். அனைத்து நாடுகளையும், கலாச்சாரங்களையும் சேர்ந்த மக்களை ஒரே மாதிரியாக மரியாதையாக நடத்த வேண்டும். வெளிநாட்டினரை சரியான முறையில் ஒருங்கிணைப்பதற்கான விதிகள் வெளிநாட்டினர் மற்றும் ஒருங்கிணைப்பு பற்றிய ஒன்றிய சட்டத்தின் (LEI) 4வது சரத்தில் கொடுக்கப் பட்டுள்ளன.

## ஒருங்கிணைப்பு: சமூகத்தின் அனைவருக்குமான பொறுப்பு

ஒருங்கிணைப்பு அனைவரையும் சம்மந்தப் பட்டது. ஒருங்கிணைப்பு அனைவருக்குமான நன்மைக்கானது. அரசும்(ஒன்றியம், காந்தோன்கள் மற்றும் கொம்யூன்கள்)சமூகமும் அனைவருக்கும் சம வாய்ப்புகளை வழங்க வேண்டும். வெளிநாட்டினர் பொது வாழ்வில் பங்கேற்பதை ஊக்குவிக்க வேண்டும். ஒருங்கிணைப்பு முதலில் சாதாரண நிறுவனங்களில் நிகழ்கிறது:

- பள்ளி
- பயிற்சி
- வேலை
- மற்றும் உடல்நலம் சார்ந்த துறை

சில நேரங்களில், வெளிநாட்டு மக்கள் இந்த நிறுவனங்களில் சேர உதவியாக ஒருங்கிணைப்பு சலுகைகள் வழங்கப் பட வேண்டும். எடுத்துக்காட்டாக, பிரெஞ்சு மற்றும் பிற பாடங்களுடனான ஒரு ஒருங்கிணைப்பு வகுப்பு, காலப் போக்கில் ஒரு தொழிற்கல்வி பள்ளியில் சேர உதவும்.

## ஒருங்கிணைப்பு கொள்கை

2014 முதல், ஒன்றிய அரசு மற்றும் காந்தோன்கள் காந்தோனிய ஒருங்கிணைப்புத் திட்டங்களை (Programmes d’intégration cantonaux – PIC) உருவாக்கியுள்ளன. இந்தத் திட்டங்கள் வெளிநாட்டினருக்கான சலுகைகளை ஒன்றிணைக்கின்றன.
PIC திட்டத்தில், பல்வேறு துறைகள் உள்ளன:

- தகவல் மற்றும் ஆலோசனை
- பிரஞ்சு பாடங்கள்
- பயிற்சி மற்றும் வேலை
- சிறு குழந்தைப் பருவம்
- "ஒன்றாக வாழ்வது"
- பாகுபாடு மற்றும் இனவெறிக்கு எதிரான போராட்டம்
- உரைவிளக்கம் மற்றும் மொழிபெயர்ப்பு

ஒவ்வொரு காந்தோனும் தன் தேவைகளுக்கு ஏற்ப தன் சொந்த திட்டங்களை உருவாக்குகிறது.
2019 முதல், புகலிடம் தேடி வரும் மக்களுக்கான ஒருங்கிணைப்புச் சலுகைகளும் இந்தத் ப்ரோக்ராம்களின் ஒரு பகுதியாகும் (சுவிஸ் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிநிரல் (Agenda Intégration Suisse - AIS)).
PIC களுக்கும் கூடுதலாக, ஒன்றிய அரசு மற்ற தேசிய திட்டங்கள் மற்றும் ப்ரோக்ராம்களை ஆதரிக்கிறது.

## ஜூரா காந்தோனில்: ஒருங்கிணைப்புக்கான 2 முக்கிய சேவை மையங்கள்

- வெளிநாட்டினர் ஒருங்கிணைப்பு மற்றும் இனவெறி எதிர்ப்பு போராட்ட அலுவலகம் (Bureau de l'intégration - BI)

ஜூரா காந்தோனில், இந்த அலுவலகம் வெளிநாட்டினர் ஒருங்கிணைப்பு மற்றும் இனவெறி எதிர்ப்பு போராட்டக் கொள்கையை செயல்படுத்துகிறது.
இந்த அலுவலகம் மக்கள், நிர்வாகம், நிறுவனங்கள் மற்றும் சங்கங்களுக்கு இடையேயான தொடர்பு புள்ளியாகும்.
சமூக செயல்பாட்டுச் சேவையின் ஒரு பகுதியான இந்த அலுவலகம் ஜூரா காந்தோனின் உள்துறையின் பொறுப்பில் உள்ளது.

- ஜூரா புலம்பெயர்ந்தோர் வரவேற்பு சங்கம் (Association Jurassienne d'Accueil des Migrants - AJAM)

AJAM புகலிடம் தேவைப்படும் மக்களை வரவேற்கிறது (பர்மிட் B அகதி, F, N மற்றும் S).
ஜூரா காந்தோனில் அவர்களின் புதிய வாழ்க்கையில் AJAM அவர்களுக்கு ஆதரவளிக்கிறது.
இந்த சங்கம் மக்களுக்கு:

- மருத்துவ சிகிச்சை பெற
- வேலை தேட
- வீடு பிடிக்க
- மற்றும் ஜூரா சமூக வாழ்க்கையில் ஒருங்கிணைக்க உதவுகிறது.

ஜூரா காந்தோன் இந்தப் பணியை AJAM க்கு ஒப்படைத்துள்ளது.
AJAM பெண்கள் மற்றும் குடும்பங்களுக்கான அனிமேஷன் மற்றும் பயிற்சி மையம் (CAFF) மற்றும் சமூக சுகாதார மையம் (MdSC) ஆகியவற்றையும் கவனித்துக் கொள்கிறது.

### மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/integration/lintegration-cest-quoi

# ஒருங்கிணைப்பு சலுகைகள்

ஒருங்கிணைப்பு சலுகைகள் வெளிநாட்டு மக்கள் சாதாரண நிறுவனங்களை நன்கு தெரிந்து கொள்ளவும், அவற்றில் எளிதாக சேரவும் உதவுகிறது. உதாரணமாக, பள்ளி, பயிற்சி, வேலை மற்றும் சுகாதாரத் துறை. இவ்வாறு, வெளிநாட்டினர் சமூக வாழ்க்கையில் சிறப்பாக பங்கேற்க முடியும்.

## 1. தகவல் மற்றும் ஆலோசனை

ஜூரா காந்தோனிற்கு வரும் மக்கள் தகவல் மற்றும் ஆலோசனையைப் பெறுகிறார்கள், எடுத்துக்காட்டாக:

- தினசரி வாழ்க்கை
- உரிமைகள் மற்றும் கடமைகள்
- பிரஞ்சு கற்றல்
- இளம் சிறார்களுக்கு ஆதரவு
- பயிற்சி
- வேலை
- இனவெறிக்கு எதிரான பாதுகாப்பு.

மக்கள் இங்கே வந்த உடன், ஒரு வரவேற்பு அமர்வுக்கு அழைக்கப்படுகிறார்கள். கொம்யூன் மற்றும் காந்தோன் அவர்களை வரவேற்று, அவர்களுக்கு காந்தோனில் வாழ்க்கை பற்றியும் பயனுள்ள சேவைகள் பற்றியும் தகவல்களை வழங்குகின்றன.
ஒருங்கிணைப்பு மற்றும் இனவெறிக்கு எதிரான போராட்டம் பற்றிய கூடுதல் தகவல் மற்றும் ஆலோசனைகளுக்கு இந்த அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்:
வெளிநாட்டினர் ஒருங்கிணைப்பு மற்றும் இனவெறிக்கு எதிரான போராட்டத்திற்கான அலுவலகம்
Faubourg des Capucins 20 – 2800 தெலமோந்த்
மின்னஞ்சல்: secr.bi@jura.ch
தொலைபேசி. 032 420 51 12
திங்கள் மற்றும் வியாழன் 8:30 மணி முதல் 12 மணி வரை மற்றும் 1:30 முதல் 4:30 மணி வரை
வெள்ளி 8:30 மணி முதல் 12 மணி வரை மற்றும் 1:30 முதல் 4 மணி வரை.
AJAM குறிப்பாக புகலிடம் கேட்டு வருபவர்களுக்கு தகவல் மற்றும் ஆலோசனைகளை வழங்குகிறது.

### அனைவருக்குமான ஆவண மையம்

போர்ரெந்த்ரூய் (Porrentruy) இல் உள்ள ஜூரா காந்தோனிய நூலகத்தில், பொதுமக்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் அனைவருக்குமான ஒரு ஆவண மையம் திறக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைப்பு மற்றும் இனவாதத்தின் கருப்பொருள்கள் பற்றிய தகவல்கள் இங்கே உள்ளன.

## 2. பிரஞ்சு பாடங்கள்

பிரெஞ்சு கற்றல் பேசி புரிந்துகொள்வதற்கும் வேலை அல்லது பயிற்சி பெறுவதற்கும் முக்கியமானது. இது அன்றாட பிரச்சனைகளை தீர்க்கவும் உதவுகிறது.

## ஜூரா காந்தோனில் பிரெஞ்சு பாடங்கள்

COMUNICA ப்ரோக்ராம் வெளிநாட்டினருக்கு ஆரம்ப நிலை (A1) முதல் மேம்பட்ட நிலை (B2) வரை பிரெஞ்சு பாடங்களை வழங்குகிறது. இந்த பாடங்கள் விலை உயர்ந்தவை அல்ல. COMUNICA ப்ரோக்ராமில், நமது எழுத்துக்களை அறியாதவர்கள் அல்லது படிக்க அல்லது எழுதுவதில் சிரமம் உள்ளவர்களுக்கான படிப்புகளும் உள்ளன: எழுத்தறிவு பாடங்கள்.
சில கொம்யூன்கள் கட்டணத்தில் ஒரு பகுதியைச் செலுத்துகின்றன.
பெண்கள் மற்றும் குடும்பங்களுக்கான அனிமேஷன் மற்றும் பயிற்சி மையம் (CAFF) அங்கேயே குழந்தைகளை பார்த்துக் கொள்ளும் சேவையுடன் பெண்களுக்கான பிரெஞ்சு பாடங்களை வழங்குகிறது. இந்த பாடங்கள் விலை உயர்ந்தவை அல்ல.
பிராந்தியத்தில் பிற பிரெஞ்சு பாடங்கள் உள்ளன.
AJAM மொழி பாடங்களை கூட குறிப்பாக புகலிடம் கேட்டு வருபவர்களுக்கு வழங்குகிறது

## பிரெஞ்சில் எந்த நிலை?

ஒரு நபரின் பிரெஞ்சு மொழி தேர்ச்சியின் நிலையைக் கண்டறிய, "மொழிகளை கற்க, கற்பிக்க, மதிப்பீடு செய்ய ஐரோப்பிய பொது கட்டமைப்பு (CECR)" பயன்படுகிறது.
இந்த கட்டமைப்பு A1 (தொடக்கம்) நிலையில் இருந்து C2 (முழுமையான தேர்ச்சி) நிலை வரை செல்கிறது. தொழில் பயிற்சியில் சேர நீங்கள் B1 அல்லது B2 அளவைக் கொண்டிருக்க வேண்டும்.
"fide" தேர்வானது சுவிட்சர்லாந்தில் அன்றாட வாழ்க்கைக்கான பிரஞ்சு நிலையை அளக்கிறது. இது வாய்மொழி (பேச்சு) மற்றும் எழுத்து மொழியின் நிலையை அளக்கிறது. முடிவுகள் "மொழி பாஸ்போர்ட்டில்" கொடுக்கப் படுகின்றன. இந்த பாஸ்போர்ட்டை வேலை தேட, குடியிருப்பு அல்லது குடியேற்ற விசாவுக்கு அல்லது சுவிஸ் குடியுரிமைக்கு விண்ணப்பிக்க பயன்படுத்தப்படலாம்.

## 3. பயிற்சி மற்றும் வேலை

ஜூரா காந்தோனில் பலர் வேலை செய்ய வருகிறார்கள். கூடுதலாக, 5% வெளிநாட்டு மக்கள் ஜூரா காந்தோனிற்கு தொழில் பயிற்சியைப் பெற வருகிறார்கள்.
ஆனால் பெரும்பாலும், வெளிநாட்டவர்களுக்கு, வேலை சூழலில் ஒருங்கிணைப்பது கடினம். வெவ்வேறு காரணங்களுக்காக இது கடினமாக உள்ளது. நிர்வாக நடைமுறைகள் சிக்கலானவை. அவர்களின் நாட்டின் பள்ளிகள் மற்றும் பயிற்சிகள் சுவிட்சர்லாந்தில் இல்லை. அவர்களின் நாட்டிலிருந்து வரும் அனுபவங்கள் மற்றும் டிப்ளோமாக்கள் சுவிட்சர்லாந்தில் அங்கீகரிக்கப் படவில்லை. மக்கள் போதுமான அளவு பிரெஞ்சு பேச மாட்டார்கள். அவர்களுக்கு நிறைய நண்பர்கள் அல்லது அறிமுகமானவர்கள் இல்லை. சில நேரங்களில் மக்கள் வேலை தேடும் போதோ அல்லது வேலை செய்யும் இடத்திலோ பாகுபாடு அல்லது அநீதிக்கு உள்ளாகிறார்கள்.

## வேலை தேட சில உதவிகள்

பிராந்திய வேலை வாய்ப்பு அலுவலகம் (Office régional de placement - ORP) மக்கள் [வேலை] (90305) தேட உதவுகிறது.
வெளிநாட்டினர் ஒருங்கிணைப்பு மற்றும் இனவெறி எதிர்ப்பு போராட்ட அலுவலகத்தில் இரண்டு பிரசுரங்கள் கிடைக்கின்றன. அவற்றின் தலைப்புகள்:

- "ஜூரா காந்தோனில் வேலை தேடல்" (தகவல் மற்றும் கருவிகள்)
- "வேலைவாய்ப்பில் அனைவரும் சமம். வேலை சூழலில் இனவெறி மற்றும் பாகுபாட்டைத் தடுப்பதற்கான சரியான நடைமுறைகளுக்கான வழிகாட்டி" (குறிப்பாக முதலாளிகளுக்கு)

## தொழில் பயிற்சியை கண்டுபிடித்து சேர உதவிகள்

PréFOR மற்றும் PAI + ப்ரோக்ராம்கள் சுவிட்சர்லாந்திற்கு வந்துள்ள 16 முதல் 25 வயதுக்குட் பட்ட இளைஞர்களுக்கானது.
இந்த ப்ரோக்ராம்கள் இந்த இளைஞர்களுக்கு பின்னர் தொழில் பயிற்சியில் சேர உதவுகின்றன.
கட்டாயப் பள்ளிக்குப் பிந்தைய பயிற்சித் துறை (கட்டாயப் பள்ளிக்குப் பிறகு) இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள் தொழில் பயிற்சியைக் கண்டறிய உதவுகிறது.
AJAM கூட குறிப்பாக புகலிடம் கேட்டு வருபவர்களுக்கான பயிற்சியைக் கண்டறிய உதவுகிறது.

## 4. சிறு குழந்தைப் பருவம் (0 முதல் 4 வயது)

வாழ்க்கையின் முதல் வருடங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு முக்கியமானவை. இந்த காலத்தில், குழந்தை பல விஷயங்களைக் கற்றுக்கொள்கிறது. குழந்தைக்கு ஒரு உறுதியான அடித்தளத்தை வழங்குவது குறிப்பாக அவர்களின் பள்ளி வாழ்க்கைக்கு முக்கியம்.
பெண்கள் மற்றும் குடும்பங்களுக்கான அனிமேஷன் மற்றும் பயிற்சி மையம் (CAFF) பெற்றோர் மற்றும் குழந்தைகளுக்கான பயிற்சி பட்டறைகளை வழங்குகிறது.
இந்த பட்டறைகளில், பெற்றோரின் பங்கு பற்றி பேசப் படுகிறது. இந்த விஷயத்தைப் பற்றியும் பேசப் படுகிறது: "குழந்தையை நன்றாகப் பள்ளியைத் தொடங்க எப்படி தயார்படுத்துவது".
"Petits:pas" என்பது Familles2000 வழங்கும் திட்டம்.
இந்த திட்டம் குழந்தைகளின் வளர்ச்சிக்கு உதவுகிறது. அது அவர்களை சமூகத்தில் ஒருங்கிணைக்க உதவுகிறது. பெற்றோர்களுடனான விளையாட்டுகள் மற்றும் செயல்பாடுகள் மூலம், குழந்தைகள் பேசவும், இயங்கவும், நண்பர்களைப் பெறவும், அவர்களின் உணர்ச்சிகளை நிர்வகிக்கவும் கற்றுக்கொள்கிறார்கள்.
"புத்தக குளியல்" 80க்கும் மேற்பட்ட மொழிகளில் புத்தகங்கள் மற்றும் கதைகளைச் சுற்றி செயல்பாடுகளை ஏற்பாடு செய்கிறது.
ஒன்றாக வாழ்வது பற்றிய புத்தகங்கள் மற்றும் விளையாட்டுகள்: வெவ்வேறு கலாச்சாரங்கள் மற்றும் ஒன்றாக வாழ்வது பற்றி குழந்தைகளுடன் பேச புத்தகங்களும் விளையாட்டுகளும் உள்ளன.
போர்ரெந்த்ரூயில் உள்ள ஜூரா காந்தோனிய நூலகத்தில் சில புத்தகங்களும் விளையாட்டுகளும் கிடைக்கின்றன.

## பிரஞ்சு மற்றும் குழந்தைகள்

வெளிநாட்டு குழந்தைகளை, பிரெஞ்சு மொழி பேசும் குழந்தைகளுடன் கூடிய விரைவில் பழக விட வேண்டும். பள்ளிக்குச் செல்வதற்கு முன் அவர்கள் பிரெஞ்சு மொழியைக் கற்றுக்கொள்வது முக்கியம். குழந்தை காப்பகங்கள், மழலையர் பள்ளி அல்லது பெற்றோர் மற்றும் குழந்தைகளுக்கான சிறப்பு வாய்ப்புகள் இதற்கு மிகவும் நல்லது.
பெற்றோர்களும் தங்கள் சொந்த மொழியை குழந்தைகளுடன் அதிகம் பயன்படுத்த வேண்டும். இதுவும் முக்கியமானது.
உதாரணமாக: குழந்தைகளிடம் அதிகம் பேசுங்கள், அவர்கள் சொல்வதைக் கேளுங்கள், அவர்களின் சொந்த மொழியில் கதைகளைச் சொல்லுங்கள்.
பள்ளிக் குழந்தைகளும் தங்கள் மொழியிலேயே பாடம் கற்கலாம். இந்த படிப்புகள் பிறப்பிட மொழி மற்றும் கலாச்சார படிப்புகள் (LCO படிப்புகள்) என்று அழைக்கப் படுகின்றன. இந்தப் படிப்புகள் பொதுவாக பிறப்பிட நாட்டின் தூதரகம் அல்லது துணைத் தூதரகம் அல்லது ஒரு சங்கத்தால் ஏற்பாடு செய்யப்படுகின்றன.
LCO படிப்புகள் பற்றிய அனைத்து தகவல்களையும் பள்ளிகள் வழங்குகின்றன.

## 5. "ஒன்றாக வாழ்வது"

நமது காந்தோனில் அனைவரும் நன்றாக இருக்க வேண்டும். ஒவ்வொரு நபரும் சமூகத்தின் ஒரு பகுதியாக அனைவரின் நன்மைக்காக தங்கள் திறமைகளை பங்களிக்கிறார்கள். ஒவ்வொரு நபரும் தன் அன்றாட வாழ்வில், தனது நகரத்தில், தனது சுற்றுப்புறத்தில் அல்லது அண்டை வீட்டாருடன் ஈடுபாடு கொள்ளலாம்.
சங்கங்கள், வெளிநாட்டு மக்கள் குழுக்கள் மற்றும் மத சமூகங்களும் இதற்கு முக்கியமானவை.
[தன்னார்வத் தொண்டு] (90321) செய்யவும் முடியும்.
"ஒன்றாக வாழ்வது" என்பதை ஆதரிக்கும் திட்டங்களை உருவாக்க விரும்புகிறீர்களா?
இந்த முகவரியில் பயனுள்ள தகவல்களையும் ஆலோசனைகளையும் காணலாம்:
வெளிநாட்டினர் ஒருங்கிணைப்பு மற்றும் இனவெறிக்கு எதிரான போராட்டத்திற்கான அலுவலகம்
Faubourg des Capucins 20
2800 தெலமோந்த்
மின்னஞ்சல்: secr.bi@jura.ch
தொலைபேசி. 032 420 51 12
திங்கள் மற்றும் வியாழன் 8:30 மணி முதல் 12 மணி வரை மற்றும் 1:30 முதல் 4:30 மணி வரை
வெள்ளி 8:30 மணி முதல் 12 மணி வரை மற்றும் 1:30 முதல் 4 மணி வரை.

## பெண்களுக்காக

பெண்கள் மற்றும் குடும்பங்களுக்கான அனிமேஷன் மற்றும் பயிற்சி மையம் (CAFF) புலம்பெயர்ந்த பெண்களுக்கான பட்டறைகள் மற்றும் செயல்பாடுகளை வழங்குகிறது. இந்த பட்டறைகள் பிரெஞ்சு மொழி பேசவும் புதிய நபர்களை சந்திக்கவும் வாய்ப்பளிக்கின்றன.

## அனைவருக்காக (ஆண்கள் மற்றும் பெண்கள்)

Caritas Jura வால் நிர்வகிக்கப்படும் LARC, அனைவருக்கும் திறந்திருக்கும் இடமாகும். இந்த இடம் புதிய நபர்களைச் சந்திக்கவும் பழகவும் செயல்பாட்டு வாய்ப்புகளை வழங்குகிறது.
வெளிநாட்டினர் ஒருங்கிணைப்பு மற்றும் இனவெறி எதிர்ப்பு போராட்ட அலுவலகம் சில நேரங்களில் ஒருங்கிணைப்பு அல்லது இனவெறி தொடர்பான பாடங்களில் வட்ட மேசை கூட்டங்கள் அல்லது கண்காட்சிகள் போன்ற நிகழ்வுகளை ஏற்பாடு செய்கிறது.

## 6. பாகுபாடுகள் மற்றும் இனவெறி எதிர்ப்பு போராட்டம்

ஒரு நபர் அநியாயமாக நடத்தப்படுகிறாரா? பின்வருவனவற்றால் அவர் மற்றவர்களை விட குறைவாக மதிக்கப்படுகிறாரா:

- அவரது தோற்றம்
- அவரது பாலினம்
- அவரது வயது
- அவரது மொழி
- அவரது சமூக நிலைமை
- அவரது வாழ்க்கை முறை
- அவரது மதம், மதிப்புகள் அல்லது அரசியல் கருத்துக்கள்
- அல்லது அவரது உடல், மன அல்லது உளவியல் குறைபாடு?

அப்படியென்றால் அவர் பாகுபாட்டினால் பாதிக்கப் பட்டவர்.
அவர் பாரபட்சமாக நடத்தப் படுகிறார் என்றும் கூறலாம்.
சுவிஸ் அரசியலமைப்பில் யாரும் பாரபட்சமாக நடத்தப் படக்கூடாது என எழுதப்பட்டுள்ளது.
தண்டனைச் சட்டத்தின் பிரிவு 261b பாரபட்சமான செயல்களுக்கு தண்டனை அளிக்கிறது.
இருப்பினும், வாழ்க்கையின் பல பகுதிகளில் பாகுபாடு மற்றும் இனவெறியைக் காண்கிறோம்.
உதாரணமாக வேலையில், வீடு தேடலில் அல்லது அண்டை வீட்டாருடனான உறவில்.
இது புண்படுத்தும் வார்த்தைகளாக, தாக்குதலாக அல்லது அநீதியின் வடிவாக இருக்கலாம்.
துரதிர்ஷ்ட வசமாக, இது பெரும்பாலும் மறைமுகமாக நிகழ்கிறது. இது நம் கண்களில் படுவதில்லை.

## நீங்கள் பாகுபாடு அல்லது இனவெறியால் பாதிக்கப்பட்டவரா?

அல்லது பாகுபாடு அல்லது இனவெறிச் செயல்களைப் பார்த்தீர்களா?
அப்படியென்றால் இந்த அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்:
வெளிநாட்டினர் ஒருங்கிணைப்பு மற்றும் இனவெறிக்கு எதிரான போராட்டத்திற்கான அலுவலகம்
Faubourg des Capucins 20 – 2800 தெலமோந்த்
மின்னஞ்சல்: secr.bi@jura.ch
தொலைபேசி. 032 420 51 12
திங்கள் மற்றும் வியாழன் 8:30 மணி முதல் 12 மணி வரை மற்றும் 1:30 முதல் 4:30 மணி வரை
வெள்ளி 8:30 மணி முதல் 12 மணி வரை மற்றும் 1:30 முதல் 4 மணி வரை.
அங்கு, உங்கள் பிரச்சனையை கேட்டு, தகவல் மற்றும் ஆலோசனை வழங்கப்படும்.
இந்த அலுவலகம் ஜூரா காந்தோனில் உள்ள அனைத்து பாகுபாடு வழக்குகளையும் பதிவு செய்கிறது.
இனவெறிக்கு எதிராக ஈடுபட விரும்புகிறீர்களா?
இனவெறிக்கு எதிரான உங்கள் திட்டங்களில் இந்த அலுவலகம் உங்களுக்கு ஆலோசனை மற்றும் ஆதரவளிக்கிறது.

## 7. உரைவிளக்கம் மற்றும் மொழிபெயர்ப்பு

நீங்கள் சுவிட்சர்லாந்திற்கு வரும்போது, உங்களுக்கு பிரெஞ்சு மொழி தெரியாது அல்லது அது சரியாகப் புரியாது. ஆனால் பெரும்பாலும், ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்வது அவசியம்.
எளிமையான சூழ்நிலைகளுக்கு, நீங்கள் மொழிபெயர்க்க உதவுமாறு நண்பர்கள், குடும்பத்தினர் அல்லது உங்கள் சமூகத்தில் உள்ளவர்களிடம் கேட்கலாம்.
ஆனால் முக்கியமான அல்லது தனிப்பட்ட உரையாடல்களுக்கு (உதாரணமாக, ஒரு மருத்துவருடன், பள்ளியில் அல்லது உத்தியோக பூர்வ ஆவணங்களுக்கு), தொழில்முறை உரைபெயர்ப்பாளரை அழைப்பது நல்லது.
Caritas Suisseன் "ஒருவரையொருவர் புரிந்து கொள்தல்" சேவையானது தொழில்முறை உரைபெயர்ப்பாளர்களை வழங்குகிறது.
அவர்கள் சமூக உரைபெயர்ப்பாளர்கள். சிலர் உங்கள் நாட்டிலிருந்து வருகிறார்கள். அவர்கள் உங்கள் மொழியைப் பேசுகிறார்கள், உங்கள் கலாச்சாரத்தையும் அறிவார்கள். அவர்கள் நேரில், தொலைபேசி அல்லது வீடியோ மூலம் வேலை செய்கிறார்கள். இந்த உரைபெயர்ப்பாளர்கள் சிறப்பு நடைமுறைகளிலும் உங்களுக்கு உதவ முடியும்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/integration/les-offres-dintegration

# சுவிட்சர்லாந்தில் புகலிடம்

உங்கள் நாட்டில் நீங்கள் ஆபத்தில் இருந்தீர்களா? நீங்கள் உங்கள் நாட்டை விட்டு வெளியேறி புகலிடம் தேடி வந்தீர்களா? சுவிட்சர்லாந்தில், புகலிடச் சட்டம் (LAsi) புகலிட விதிகளை வரையறுக்கிறது. புலம்பெயர்வுக்கான தேசிய செயலகம் (SEM) ஒவ்வொரு கோரிக்கையையும் கவனமாக ஆய்வு செய்கிறது. இந்த சட்டம் தன் பிறப்பு, மதம், தேசியம், சமூகக் குழு அல்லது அரசியல் கருத்துக்கள் காரணமாக தங்கள் நாட்டில் ஆபத்தில் இருக்கும் ஒவ்வொரு நபருக்கும் மற்றொரு நாட்டில் தஞ்சம் கோர உரிமை உண்டு என்று கூறுகிறது.

## புகலிடம் என்றால் என்ன?

உலகெங்கிலும் மக்கள் தங்கள் நாட்டை விட்டு வெளியேறி வேறு நாட்டில் உதவியை நாட வேண்டியுள்ளது.
மேலே விவரிக்கப்பட்ட காரணங்களுக்காக சிலர் தங்கள் நாட்டில் ஆபத்தில் உள்ளனர்.
யுத்தம் காரணமாக பலர் வெளியேற வேண்டியுள்ளது.
அகதிகளாக அங்கீகரிக்கப்பட்ட மக்களுக்கு சுவிட்சர்லாந்து புகலிடம் ( பர்மிட் B அகதி) வழங்குகிறது.
அதன் பொருள்: தனிப்பட்ட முறையில் குறிவைக்கப் பட்டு உயிருக்கு ஆபத்தில் உள்ளவர்கள்.
அகதிகளாக அங்கீகரிக்கப் படாத, ஆனால் பாதுகாக்கப்பட வேண்டிய நபர்களுக்கு சுவிட்சர்லாந்து குறிப்பிட்ட காலத்திற்கு (தற்காலிக பர்மிட் F அல்லது S) பாதுகாப்பை வழங்குகிறது.

## சுவிட்சர்லாந்தில் புகலிடக் கொள்கை

SEM (புலம்பெயர்வுக்கான தேசிய செயலகம்) சுவிட்சர்லாந்தில் யார் அகதிகளாக இருந்து தஞ்சம் பெறலாம் என்பதை தீர்மானிக்கிறது. இதைச் செய்ய, SEM ஒவ்வொரு கோரிக்கையையும் ஆய்வு செய்கிறது. அது புகலிடம் பற்றிய சட்டம் (LAsi), ஜெனிவா ஒப்பந்தம் மற்றும் டப்ளின் ஒப்பந்தங்களின் படி வரையறுக்கப் பட்ட விதிகளைப் பின்பற்றுகிறது.
அகதி என்றால் தன் பிறப்பு, மதம், தேசியம், சமூகக் குழு அல்லது அரசியல் கருத்துக்கள் போன்ற காரணங்களால் தன் நாட்டில் ஆபத்தில் இருக்கும் ஒரு நபர் ஆகும்.
அகதிகளாக அங்கீகரிக்கப் பட்டவர்கள்:

- கீழே உள்ள காரணங்களில் ஒன்றிற்காக அச்சுறுத்தல் மற்றும் பெரும் ஆபத்தில் உள்வர்கள்:
- தன் நாட்டினால் பாதுகாக்கப் படாதது
- தன் நாட்டின் மற்றொரு பகுதியில் தஞ்சம் அடைய முடியாதது

புலம்பெயர்வுக்கான தேசிய செயலகம் (SEM) ஒவ்வொரு புகலிட விண்ணப்பத்தையும் கவனமாக ஆய்வு செய்கிறது.
புகலிடம் கோருதல் எவ்வாறு என்பதை சுவிஸ் புகலிடச் சட்டம் விளக்குகிறது. இது சுவிட்சர்லாந்தில் குடியிருப்பு, குடியேற்ற விசா, குடும்ப மறு இணைப்பு, வேலை வாய்ப்பு, சமூக உதவி, சுகாதார காப்பீடு மற்றும் ஒருங்கிணைப்பு போன்ற பல கூறுகளையும் விளக்குகிறது.
சுவிட்சர்லாந்து டப்ளின் ஒப்பந்த விதிகளையும் பின்பற்றுகிறது. இந்த விதிகள் எந்த நாடு புகலிட விண்ணப்பத்தை பரிசீலிக்க வேண்டும் என்பதை வரையறுக்கிறது. பொதுவாக, அது ஒருவர் தனது கோரிக்கையை முதலில் வைத்த நாடு ஆகும்.

## ஜூரா புலம்பெயர்ந்தோர் வரவேற்பு சங்கம் (AJAM)

AJAM புகலிடம் கோரி வருபவர்களை வரவேற்கிறது (பர்மிட் N, F, S மற்றும் B அகதி).
ஜூரா காந்தோனில் அவர்களின் புதிய வாழ்க்கையில் AJAM அவர்களுக்கு ஆதரவளிக்கிறது.
இந்த சங்கம் மக்களுக்கு:

- மருத்துவ சிகிச்சை பெற
- வேலை தேட
- வீடு பிடிக்க
- மற்றும் ஜூரா சமூக வாழ்க்கையில் ஒருங்கிணைய உதவுகிறது.

ஜூரா காந்தோன் இந்தப் பணியை AJAM க்கு ஒப்படைத்துள்ளது.
AJAM பெண்கள் மற்றும் குடும்பங்களுக்கான அனிமேஷன் மற்றும் பயிற்சி மையம் (CAFF) மற்றும் சமூக சுகாதார மையம் (MdSC) ஆகியவற்றையும் கவனித்துக் கொள்கிறது.

## புகலிடம் கோரி வருபவர்களின் ஒருங்கிணைப்பு (பர்மிட் N, F, S மற்றும் B அகதி)

இந்த நபர்களின் ஒருங்கிணைப்பு 3 படிகளில் செய்யப்படுகிறது:

## 1. முதல் வரவேற்பு: வந்து சேர்ந்து தேவைகளை கவனித்தல்

ஜூரா காந்தோனிற்கு வரும் மக்கள் முதலில் ஒரு கூட்டு மையத்திற்குச் செல்கிறார்கள்.
சமூக சேவையாளர்கள் ஒவ்வொரு நபரின் தேவைகளையும் பார்த்து மதிப்பீடு செய்கிறார்கள். ஒன்றாக, அவர்கள் தனிப்பட்ட நோக்கங்களின் அடிப்படையில் ஒரு ஒருங்கிணைப்பு திட்டத்தை உருவாக்குகிறார்கள்.
இந்த நிலை 2 வாரங்கள் நீடிக்கும்.

## 2. சமூக பழக்கம்: சுவிஸ் வாழ்க்கையை அறிந்து கொள்வது

இந்த நிலை மக்களுக்கு ஜூரா வாழ்க்கையில் இணைய உதவுகிறது (செயல்களைச் செய்ய, நண்பர்களைப் பெற). சமூக கல்வியாளர்கள் மற்றும் சமூக சேவகர்கள் சுவிட்சர்லாந்தில் மக்கள் தங்கள் புதிய வாழ்க்கையை கட்டமைக்க உதவுகிறார்கள்.
இந்த படி 6 மாதங்கள் முதல் ஒன்றரை ஆண்டுகள் வரை நீடிக்கும்.

## 3. தொழில்முறை ஒருங்கிணைப்பு: வேலை தேடுதல்

வேலைவாய்ப்பு நிபுணர்கள் ஒரு வேலையைக் கண்டு பிடிப்பதில் உதவுகிறார்கள்.
இந்த நிபுணர்களின் பெயர்: « job coach ». அவர்கள் வெளிநாட்டு டிப்ளோமாக்கள் அங்கீகரிக்கப்படுவதற்கு அல்லது தொழில்முறை பயிற்சியைப் பெறுவதற்கு மக்களுக்கு உதவுகிறார்கள்.
இந்த படி AJAM இன் ஆதரவு முடிவடையும் வரை பல ஆண்டுகள் நீடிக்கும்.

## AJAM இன் ஆதரவு எவ்வளவு காலம் நீடிக்கும்?

பொதுவாக, AJAM மக்களுக்கு வேலை கிடைத்து சுதந்திரமாக இருக்கும் வரை உதவுகிறது.

## புகலிடம் கோரி வருபவர்களுக்கு AJAM இன் ஒருங்கிணைப்பு சலுகைகள்

பெரியவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான ஒருங்கிணைப்பு சலுகைகள் உள்ளன

## 1. பெரியவர்களுக்கான சலுகைகள்

பெரியவர்களுக்கான சலுகைகள் இவை:

### - தகவல் பட்டறைகள்

சுவிட்சர்லாந்திற்கு வந்த பிறகு, மக்கள் பல தகவல் பட்டறைகளில் பங்கேற்கிறார்கள்.
இந்தப் பட்டறைகள் கட்டாயம்.
இந்தப் பட்டறைகள் பிரெஞ்சு மொழியிலும் பிறப்பிட மொழியிலும் நடைபெறுகின்றன. அவை உடல்நலம், ஜூராவில் வாழ்க்கை, வேலை, வீட்டுவசதி போன்ற பல்வேறு கருப்பொருள்களை கொண்டவை.

### - பிரஞ்சு பாடங்கள்

இளைஞர்கள் மற்றும் முதியவர்கள், குடும்பத்துடன் அல்லது இல்லாமல், வேலையுடன் அல்லது இல்லாமல் அனைவருக்கும் வெவ்வேறு பிரெஞ்சு படிப்புகள் வழங்கப்படுகின்றன.
இந்தப் படிப்புகள் தொடக்கம் (A1) முதல் மேம்பட்ட (B2) நிலை வரை வெவ்வேறு நிலைகளில் உள்ளன.

## 2. சிறார்களுக்கான வாய்ப்புகள்

15 வயது வரை, குழந்தைகள் தங்கள் உள்ளூர் பள்ளிக்குச் செல்கிறார்கள்.
பொதுவாக, 16 வயதிலிருந்தே, இளைஞர்கள் தொழில்முறை பயிற்சியைப் பின்பற்றுகிறார்கள்.
ஆனால் இளம் வெளிநாட்டவர்கள் முதலில் தங்கள் பிரெஞ்சு மற்றும் பிற திறன்களை மேம்படுத்த சிறப்புப் பயிற்சியைப் பின்பற்றலாம் (உதாரணமாக கணிதம்).
இளைஞர்களுக்கான வாய்ப்புகள் இவை:

### - Bravo

எந்த பயிற்சியும் இல்லாத மற்றும் பிரெஞ்சு மொழியைக் கற்கத் தொடங்கும் 16 முதல் 25 வயதிற்குட்பட்ட இளைஞர்களுக்கு.
இந்த ப்ரோக்ராம் இந்த இளைஞர்களுக்கு பிரெஞ்சு மொழியில் A1 நிலையை அடைய உதவுகிறது. இது கணிதம் மற்றும் கணினி அறிவியலின் அடிப்படைகளையும் வழங்குகிறது.

### - PréFor (பயிற்சிக்கு முந்தைய தயாரிப்பு)

பிரெஞ்சு மொழியில் A1 நிலை கொண்ட 16 முதல் 25 வயதுடைய இளைஞர்களுக்கு.
இந்த திட்டம் இந்த இளைஞர்களுக்கு தொழில்முறை பயிற்சியில் சேர உதவுகிறது.
இது B2 நிலை வரை பிரெஞ்சு மொழியைக் கற்றுக்கொடுக்கிறது.
இது கணிதம் மற்றும் கணினி அறிவியலில் திறன்களை வழங்குகிறது.

### - PAI+ (ஒருங்கிணைப்பு முன் கற்றல்)

பிரெஞ்சு மொழியில் B1 உள்ள 16 முதல் 25 வயதுடைய இளைஞர்களுக்கு.
இந்த ப்ரோக்ராம் இந்த இளைஞர்களுக்கு தொழில்முறை உலகில் நுழைய உதவுகிறது. இது ஒரு தொழிற்பயிற்சியை (AFP அல்லது CFC) பின்பற்ற இளைஞர்களை தயார்படுத்துகிறது.
இந்த திட்டம் 1 வருடம் நீடிக்கும்.

## புகலிடத் துறையில் பல்வேறு பர்மிட்கள்

சுவிட்சர்லாந்திற்கு வந்ததிலிருந்து, ஒரு நபர் தனது பர்மிட்டை பல முறை மாற்றுவார்.
இது அவரது புகலிட விண்ணப்பத்தின் நிலைகள் மற்றும் முடிவுகளைப் பொறுத்தது.
ஒருவர் பெறும் பர்மிட் (N, F அல்லது B அகதி) அவர்களின் சட்டப்பூர்வ நிலையின் அடையாளமாகும்.
சுவிட்சர்லாந்தில் உள்ள புகலிட அமைப்பில் ஒருவர் எவ்வாறு அங்கீகரிக்கப்படுகிறார் என்பதை சட்ட நிலை காட்டுகிறது.
வெவ்வேறு சட்ட நிலைகள் (அல்லது பர்மிட்கள்) ஒருவரின் வாழ்க்கையில் ஒரே உரிமைகளை வழங்குவதில்லை.
எடுத்துக்காட்டாக, பர்மிட்களைப் பொறுத்து, இவை வேறுபடுகிறது:

- குடும்பம் ஒன்றிணைவதற்கான உரிமை (உங்கள் குடும்பத்தை சுவிட்சர்லாந்திற்கு கொண்டு வருதல்)
- வேலை செய்யும் உரிமை
- சமூக உதவிக்கான உரிமை
- பயணம் செய்வதற்கான உரிமை

சட்ட நிலைக்கு ஏற்ப வெவ்வேறு பர்மிட்களை விளக்கும் அட்டவணை இங்கே உள்ளது

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/integration/lasile-en-suisse